**<u>சுருக்கம்</u>**

பணியமைப்பு – நகராட்சி நிர்வாகம் – மூன்றாம் நிலை நகராட்சிகள் அலகு – சில இளநிலை உதவியாளர்கள்/வரித் தண்டலர்கள் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தது – பவானிசாகர் அடிப்படை பயிற்சிக்கு தாமதமாக அனுப்பப்பட்டது – தொடர்புடைய விதிகளை தளர்த்தி தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ததற்கான ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (பத்தாண்டு) எண்.301** **நாள்:11.06.2010.**

**படிக்கப்பட்டது:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 6641/2010/எஸ்1, நாள் 20.03.2010.

----

**<u>ஆணை:–</u>**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாகத்தின் மூன்றாம்நிலை நகராட்சிகள் அலகில் பின்வரும் இளநிலை உதவியாளர்கள் / வரித் தண்டலர்கள் பேரூராட்சிகள் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தாலும், கருணை அடிப்படையிலும் பணி நியமனம் செய்யப்பட்டு தற்போது பின்வரும் விவரப்படி மூன்றாம்நிலை நகராட்சிகளில் பணிபுரிந்து வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | பணியாளர் பெயர் (திரு/திருமதி) மற்றும் பதவி | கு.பழனியப்பன் இளநிலை உதவியாளர், குறிச்சி மூன்றாம்நிலை நகராட்சி | சி.சாந்தி வரித்தண்டலர், குறிச்சி மூன்றாம்நிலை நகராட்சி | இ.கோமதி இளநிலை உதவியாளர், அரியலூர் மூன்றாம்நிலை நகராட்சி | ஆர். முத்துக்கண்ணு வரித்தண்டலர், அரியலூர் மூன்றாம்நிலை நகராட்சி | ஆர்.சுந்தரம் இளநிலை உதவியாளர், குறிச்சி மூன்றாம்நிலை நகராட்சி |
| 2 | பணியில் முதன்முதலில் சேர்ந்த பதவி மற்றும் பேரூராட்சி பெயர் | வரித்தண்டலர் குனியமுத்தூர் பேரூராட்சி | வரித்தண்டலர் குறிச்சி சிறப்புநிலை பேரூராட்சி | இளநிலை உதவியாளர் ஜெயங்கொண்டம் முதல்நிலை பேரூராட்சி | வரித்தண்டலர் பெரம்பலூர் பேரூராட்சி | இளநிலை உதவியாளர் பள்ளிப்பட்டு பேரூராட்சி |
| 3 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஆணை எண். | 2676/ தொகுதி–4/ 98–99/ எம்இடிபி, நாள் 23.07.2000 | 730/பிஸ்பி / டி3/99, நாள் 21.01.1999 | 2619/ தொகுதி–4/ 98–99/ ஏஏ–2000, நாள் 25.07.2000 | 2619/ தொகுதி–4/ 98–99/ ஏஏ2000, நாள் 25.07.2000 | கோவை கலவரத்தில் உயிரிழந்தவர் வாரிசுக்கு கருணை அடிப்படை பணி நியமன ஆணை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை எண்.5625/98/ பே2, நாள் 14.12.1998 |
| 4 | பணி நியமன செயல்முறை எண் மற்றும் நாள் | கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் செயல் முறைகள் ந.க.எண்.3798/ 2000/பே2, நாள் 09.08.2000 | கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறைகள் ந.க.எண்.409/99/ பே2, நாள் 12.09.1999 | பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறைகள் ந.க.எண்.3579/ 2000/பே2, நாள் 21.08.2000 | பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறைகள் ந.க.எண்.3579/ 2000/பே2, நாள் 21.08.2000 | கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறைகள் ந.க.எண்.5625/ 1998/பேரூ, நாள் 14.12.1998 |
| 5 | பணிவரன்முறை படுத்தப்பட்டநாள் | 21.8.2000 | 22.02.1999 | 28.08.2000 | 11.09.2000 | 18.12.1998 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | பவானிசாகர் அடிப்படை பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடிக்கப்பட்ட நாள் | ந.க.எண்.அ3/ 3380//2009 167–வது அணி பயிற்சி காலம் 30.9.09 முதல் 27.11.09 வரை | கடிதம் எண்.அ3/3380/ 2009 167–வது அணி பயிற்சி காலம் 30.9.09 முதல் 27.11.09 வரை | அ3/2737//2009, நாள் 30.1.2010 168–வது அணி பயிற்சி காலம் 2.12.09 முதல் 30.01.10 வரை | அ3/2737/09, நாள் 30.1.10–ன் படி பயிற்சி காலம் 2.12.09 முதல் 30.1.10 வரை | கடிதம் எண்.அ1/2620/ 09, நாள் 15.10.09–ன்படி பயிற்சி காலம் 25..7.09 முதல் 22.9.09 வரை |
| 7 | இரண்டாண்டு பணி முடித்து தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நாள் | 20.08.2002 | 21.02.2001 | 27.08.2002 | 10.09.2002 | 17.12.2000 |

2. இந்நிகழ்வில் மேற்காணும் பணியாளர்கள் பணிமுறிவின்றி தொடர்ச்சியாகப் பணிபுரிந்துள்ளமையால், அவர்களை தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளில் விதி 34 (a) பிற்சேர்க்கை V –ஐ தளர்த்தி, தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ததற்கு உரிய ஆணை வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், மேலே பத்தி 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து பணியாளர்கள், தகுதிகாண் பருவத்தை இப்பணியாளர்கள் பெயருக்குக் கீழே வரிசை எண்.7–ற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் நிறைவு செய்ததாக அறிவிக்கும் பொருட்டு தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளில் விதி 34 (a) பிற்சேர்க்கை V –ஐ தளர்த்தி, தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ததாக அறிவித்தும், அவர்கள் ஆண்டு ஊதிய உயர்வு பெற ஏதுவாக தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதி 23A-யும், தகுதிகாண் பருவத்தினை நீட்டிக்க பொது விதிகள் 26 மற்றும் 28 ஆகியவற்றை தளர்த்தியும் ஆணையிடலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையினைத் தொடர்ந்து, மேற்படி பணியாளர்கள் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் நிலுவை தொகை ஏதுமிருப்பின் அவற்றை பெற்றிட தகுதியுடையவராகின்றனர்.

5. மேற்காணும் பணியாளர்களின் பணிபதிவேடுகள் இத்துடன் திருப்பியனுப்பி வைக்கப்படுகின்றது. இதனைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசு முதன்மை செயலாளர்**

பெறுநர்
சம்பந்தப்பட்ட தனியர்கள் (நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5 வழியாக).
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 600 108.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை – 600 108.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை / பெரம்பலூர் மாவட்டம்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 600 006.
நகல்:– செயல் அலுவலர், குறிச்சி / அரியலூர் மூன்றாம் நிலை நகராட்சி.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்